# உதவி அமர்வு நீதிபதி மற்றும் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.

முன்னிலை :– திருமதி.J.கிறிஸ்டல் பபிதா எம்.எஸ்.சி., எம்.எல்.,
உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழக் கிழமை

**S.C.No. 90/ 2017**

C.N.R.No.TNTS 02–000001–2017

(செங்கோட்டை, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின்
முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண். 23 /2016)
(செங்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 235 / 2015)

| | | |
|---|---|---|
| அரசுக்காக :<br>காவல் ஆய்வாளர்,<br>செங்கோட்டை காவல் நிலையம். | : | ... குற்ற முறையிடுபவர் |
| | : | எதிரிகள் :–<br>1) குமார் (எ) பசுபதிகுமார், வயது 31/16<br>த.பெ. முருகன்,<br>இந்திரா காலனி, வல்லம்.<br><br>2) பழனிசாமி, வயது 23/15<br>த.பெ. பாஸ்கர்,<br>சந்தனமாரியம்மன் கோவில் தெரு,<br>வல்லம். |
| அரசுதரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு | | 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 326, 307– ன்படியும், 2 எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 307– ன்படியும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| நீதிமன்றம் எதிரிகள் மீது வனைந்த குற்றச்சாட்டுகள் | | 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 307–ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 307 உ/இ 34 மற்றும் 307 உ/இ 109 – ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| எதிரிகளின் கூற்று | | குற்றவாளிகள் இல்லை. |
| நீதிபதியின் நிர்ணயம் | | 1ம் எதிரி இதச பிரிவு 294(பி)–ன் கீழும், 2ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 307 உ/இ 34 மற்றும் 307 உ/இ 109 – ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்றும் 1ம் எதிரி இதச பிரிவு 307 – ன் கீழ் குற்றவாளி என்றும் தீர்மானிக்கப்படுகிறது. |
| தீர்ப்பு :– | : | முடிவாக, 1ம் எதிரி மீதான இதச பிரிவு 294(பி) –ன் படியான குற்றச்சாட்டுகளும், 2ம் எதிரி மீதான இதச பிரிவுகள் 294(பி), 307 உ/இ 34 மற்றும் 307 உ/இ 109– ன்படியான குற்றச்சாட்டுகளும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து, 1ம் எதிரியை இதச பிரிவு 294(பி) – ன் படியான குற்றங்களிலிருந்தும், 2ம் எதிரியை இதச பிரிவுகள் 294(பி), 307 உ/இ 34 மற்றும் 307 உ/இ 109 – ன் படியான குற்றங்களிலிருந்தும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்தும், 1ம் எதிரி மீதான இதச பிரிவு 307– ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே 1ம் எதிரி மேற்கூறிய பிரிவின் கீழ் குற்றவாளி என்றும் |

| | | |
|---|---|---|
| | | தீர்மானித்து வழக்கின் தன்மை, எதிரியின் வயது, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, 1ம் எதிரி மீதான இதச பிரிவு 307– ன்படியான குற்றத்திற்கு தண்டனையாக **3 வருடங்கள் கடுங்காவல் சிறைதண்டனையும், அபராதம் ரூ.5000/–** விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் **3 மாதங்கள் மெய்காவல் சிறைதண்டனை** விதித்தும், குவிமுச பிரிவு 235(ii) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் 1ம் எதிரி விசாரணை காலத்தில் நீதிமன்ற காவலில் இருந்த 12.10.2015 முதல் 14.12.2015 வரையான நாட்களை 1ம் எதிரியின் சிறைத்தண்டனை காலத்தில் இருந்து கழித்துக் கொள்ள குவிமுச பிரிவு 428 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.<br>பாதிக்கப்பட்ட அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவருக்கு குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 357 (A) ன்படி இழப்பீடு வழங்க தென்காசி மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டு தீர்ப்புரையின் நகலை அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் பி.ஆர்.எண்.126/2024–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சுமார் 81 செமீ நீளமுள்ள |

| | | |
|---|---|---|
| | | வாள் ஒன்று பயனற்ற பொருள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கானது செங்கோட்டை, கற்றறிந்த நீதித்துறை நடுவர் அவர்களால் 16.02.2016 அன்று முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.23/2016 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பிறகு இவ்வழக்கு மேல் விசாரணைக்காக திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு இந்த வழக்கானது **அமர்வு வழக்கு எண்.90/2017** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, திருநெல்வேலி, முதன்மை மாவட்ட நீதிமன்றத்தால் இந்த வழக்கானது தென்காசி முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டு, தென்காசி முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்தில் 06.02.2017 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு. பின்னர் அங்கிருந்து இவ்வழக்கானது தென்காசி முதன்மை மாவட்ட நீதிமன்ற A.No.4/2024 dt. 28.02.2024 உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்று, 26.03.2024 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு **11.02.2026** அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S. பழனிகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரான ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (05-03-2026) இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

1. அரசுத்தரப்பில், கடந்த 11.10.2015 ம் தேதி இரவு 18.45 மணிக்கு வல்லம் நடுத்தெரு முக்கில் எதிரிகள், புகார்தாரரின் மகன் சாட்சி –2 ஸ்டீபன்சன் ராஜை பார்த்து "என்ன குச்சிமிட்டாயை சுண்ணியை சூப்பிரது மாதிரி சூப்பிரையே" என அசிங்கமாக பேசியதாகவும், 2ம் எதிரி சாட்சி –2 ஐ பார்த்து "இந்த ஊரில் சானா கூதி மவன்கள் எங்களை எதிர்த்து பேசுற அளவுக்கு வந்து விட்டீர்களா, சானா பெயல்களை 2 பேரையாவது போட்டு தள்ள வேண்டும் என்று நினைத்திருந்தோம் நீ வந்து மாட்டிக்கிட்டயால" என்று சொல்லி சாட்சி –2 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கில் கையால் சாட்சி –2 ன் முதுகில் அடித்து கீழே தள்ளியதாகவும், 1ம் எதிரியை பார்த்து "ஏய் இந்த கூதி மகனை வெட்டுல" என்று 2 ம் எதிரி சொன்னதும், 1ம் எதிரி வாளால் சாட்சி –2 ன் தலையை நோக்கி "சானா புண்ட மவன இத்தோடு செத்து தொல" என்று ஓங்கி வெட்டியதாகவும், அந்த வெட்டை சாட்சி –2 தனது வலது கையால் தடுத்ததில் வலது உள்ளங்கையில் கொடுங்காயம் ஏற்படுத்தி எதிரிகள் கொலை முயற்சி செய்ததாகவும், எனவே 1 ம் எதிரி இதச பிரிவு 294(பி), 326, 307– ன்படியும், 2 ம் எதிரி இதச பிரிவு 294(பி), 323, 307– ன்படியும் குற்றம் புரிந்துள்ளதாக செங்கோட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகளுக்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலேயே வழக்கின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டு, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 307–ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக உள்ளதால் இந்த வழக்கு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) பிரிவின்படி அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்கள்

புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 307 –ன் படியும், 2 ம் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 307 உ/இ 34 மற்றும் 307 உ/இ 109 –ன் படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தார்கள். எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:–</u>

கடந்த 11.10.2015 ம் தேதி இரவு 8.45 மணியளவில் அசா.1 அரசமுத்து என்பவருக்கு வல்லம் நடுத்தெரு முக்கில் ஜெயபால் வீட்டுக்கு அருகில் அவரது ன் மகன் அசா–2 ஸ்டீபன் சன்ராஜ் என்பவரை எதிரிகள் வெட்டியதாக போன் மூலம் தகவல் கிடைத்துள்ளது. அசா–1 கேள்விபட்டு அங்கு சென்றபோது சம்பவயிடத்தில் அவரது மகன் அசா–2 கையில் இரத்த வெள்ளத்துடன் காணப்பட்டுள்ளார். அசா–2 ஐ செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று முதலுதவி செய்துவிட்டு திரவியம் மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு சேர்த்துள்ளார். மறுநாள் காவல் நிலையம் சென்று அசா–1 இது சம்மந்தமாக அசாஆ–1 புகார் மனு கொடுத்துள்ளார். அசா–2 ஸ்டீபன்சன்ராஜ், அசா–3 ஆதிநாராயணன், அசா–4 ராஜசேகர் ஆகியோர்கள் சம்பவம் குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6. அசா–9 மருத்துவர். கங்காதேவி என்பவர் கடந்த 11.10.2015 ம் தேதியன்று இரவு 8.50 மணியளவில் அசா–2 ஸ்டீபன் சன்ராஜ் என்பவரை பரிசோதித்துள்ளார். அவருக்கு வலது கை மணிக்கட்டில் 15 x 10 x 3 செமீ அளவிற்கு ஆழமான வெட்டுக்காயம் இருந்துள்ளது. எலும்பு வெளியே தெரிந்து

கொண்டிருந்துள்ளது. அவர் வலது கை அசைக்க முடியவில்லை என்று கூறியுள்ளார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார். நாகர்கோவிலில் தனியார் மருத்துவமனையில் எடுத்த சிகிச்சை விபரங்களை பார்த்து அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச்சான்று அசாஆ–8 அளித்துள்ளார்.

7. அசா–10 மருத்துவர் ரமேஷ் என்பவர் அசா–2 ஸ்டீபன் சன்ராஜ் என்பவரை பரிசோதனை செய்த போது அவருக்கு வலது உள்ளங்கையில் முன்புறமாகவும், உள்புறமாகவும் 12 x 6 x 2.5 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டுள்ளது. அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் மணிக்கட்டு பகுதியில் உள்ள மணிக்கட்டு முத்தெலும்புகளில் ஒன்று உடைந்து காணப்பட்டுள்ளது. அந்த காயம் மணிக்கட்டு பகுதியை நோக்கி சென்று அறுபட்ட அசைவு நரம்புகளும் இரத்தக்குழாய்களும் வெளியே தெரியும்படி காணப்பட்டுள்ளது. காயத்திலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்துள்ளது. அதே தினம் வலது கை விரல்களை உள்நோக்கி மடக்கும் அறுப்பட்ட நரம்புகளை சரிசெய்யும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. சிகிச்சை முடிந்து 15.10.2015 ம் தேதி அன்று அசா–2 விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அசாஆ–9 வழங்கியுள்ளார்.

8. அசா.11 காவல் உதவி ஆய்வாளர் ஜெயசங்கரன் என்பவர் சம்பவம் குறித்து அசா.1 அரசமுத்து என்பவர் கொடுத்த அசா.ஆ.1 புகார் மனுவை பெற்று அதனடிப்படையில் காவல் நிலைய குற்ற எண்.235/2015 சட்டப்பிரிவுகள் 294(b) மற்றும் 307 இதசவின் கீழ் அசா.ஆ.10 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னிட்டு வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக அசா.12 காவல் ஆய்வாளர் பிரதாபன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

9. மேற்படி வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அசா.12 வட்ட காவல் ஆய்வாளர் பிரதாபன் அவர்கள் 12.10.2015 அன்று 13.00

மணியளவில் இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அசா–7 ஜேம்ஸ் மற்றும் அசா–5 ஜோசப் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அசா.ஆ.11 பார்வை மகஜர் மற்றும் அசா.ஆ.12 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் அன்றைய தினம் 16.00 மணிக்கு இந்த வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகளை செங்கோட்டை வல்லம் சிலுவை முக்கு அருகில் வைத்து கைது செய்துள்ளார். சாட்சிகள் அசா–8 அசோக் மற்றும் அசா–6 பண்டிட்மோதிலால் ஆகியோர்கள் முன்னிலையில் 1ம் எதிரி குமார் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்றச்செயலுக்கு பயன்படுத்திய ஆயுதத்தை எடுத்து ஆஜர் செய்துள்ளார். சுமார் 12 செமீ கைப்பிடி 69 செமீ இரும்பு கைப்பாகமும் ஆக மொத்தம் சுமார் 81 செமீ நீளம் கொண்ட ஒரு வாளை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சி அசாஆ–14 ல் கைப்பற்றியுள்ளார். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை அசாஆ–15 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். 20.10.2015 ம் தேதி சம்பவத்தில் காயம்பட்ட அசா–2 ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 05.11.2015 ம் தேதி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த எலும்பு முறிவு மருத்தவர் ரமேஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் கொடுத்த அறிக்கையின் படி 11.11.2015 ம் தேதி இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி), 323, 326 மற்றும் 307 இதச வின் படி சட்டப்பிரிவுகளை மாறுதல் அறிக்கை அசாஆ–16 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அன்றைய தினமே காயம்பட்ட நபருக்கு முதல் சிகிச்சை அளித்த மருத்துவர் கங்காதேவி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னிட்டு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 326 மற்றும் 307– ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

10. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின்படி

வினவியபோது எதிரிகள் 'பொய் சாட்சி' என்று மறுத்துள்ளார்கள். எதிரிகள் தரப்பில், சாட்சிகள் 'உள்ளது' என்று கூறியுள்ளார்கள். ஆனால் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை.

<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்ன வென்றால்,</u>

11. அரசுத்தரப்பில் 1 ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 307–ன் படியான குற்றச்சாட்டுகளும், 2ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 307 உ/இ 34 மற்றும் 307 உ/இ 109 – ன் படியான குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

**<u>12) தீர்வு–</u>**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரிகள் அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவரை அவதூரான வார்த்தைகள் பேசி வாளால் தாக்கி கொலை செய்ய முயற்சித்ததாக உள்ள அரசுதரப்பு வழக்கை ஒத்து பாதிக்கப்பட்ட அசா–2 சாட்சியம் அளித்துள்ளார் எனவும், அசா–1 ன் சாட்சியத்தை ஒத்து கண்ணுற்ற சாட்சிகளான அசா–3 ஆதிநாராயணன், அசா–4 ராஜசேகர் ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள் எனவும், அசா–2 க்கு ஏற்பட்ட காயத்தை பொறுத்து அசா–2 க்கு முதல் சிகிச்சை அளித்த மருத்துவர் அசா–9 கங்காதேவி மற்றும் மேல் சிகிச்சை அளித்த மருத்துவர் அசா–10 ரமேஷ் ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் சம்பவத்திற்கு மறு நாள் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டாலும் காயம்பட்ட நபர் சம்பவம் நடந்த சிறிது நேரத்திலே மருத்துவமனைக்கு சென்றுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகம் ஏற்படுத்தவில்லை எனவும், எதிரிகள் அசா–1 ஐ தாக்க பயன்படுத்திய வாள் புலன் விசாரணை அதிகாரியான அசா–12 காவல் ஆய்வாளர் பிரதாபன் என்பவரால் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும், இந்த வழக்கில் சம்பவ நேரம் குறித்து சம்பவ சாட்சிகளின் வாக்குமூலத்தில் உள்ள சிறு முரண்பாடுகள்

அரசுதரப்பு வழக்கை பாதிப்பு அடைய வைக்கவில்லை எனவும், அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

13. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், சம்பவயிடம், சம்பவ நேரம் குறித்து அரசுத்தரப்பு வழக்கிற்கும் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திற்கும் முரண்பாடுகள் உள்ளது எனவும், முதல் தகவல் அறிக்கை 15 மணிநேர காலதாமதத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், அரசுத்தரப்பில் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவும், காயத்தை பொறுத்து அசா–8 அசா–9 மருத்துவரின் சாட்சியத்தில் முரண்பாடுகள் உள்ளது எனவும், அசா–2 ஐ கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் எதிரிகளுக்கு இருந்ததாக அரசுத்தரப்பில் எந்த சாட்சியங்களும் இல்லை எனவும், எதிரிகளுக்கும் அசா–2 க்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததாக அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை எனவும், அசா–2 ற்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே குறியீடு செய்யப்படவில்லை எனவும், அரசுத்தரப்பில் தனி நபர் சாட்சிகள் எதுவுமில்லை எனவும், சம்பவத்தை கண்ணுற்றதாக அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அசா–2 ன் உறவினர்கள் எனவும் சம்பவ நேரத்தில் சம்பவயிடத்தில் வெளிச்சம் இருந்ததாக அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், அசா–2 மருத்துவரிடம் அருவாளால் தாக்கப்பட்டதாக கூறியுள்ளார் எனவும், ஆனால் அசா–2 மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் 1 ம் எதிரி அசா–2 ஐ வாளால் தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள் எனவும், ஆயுதத்தை பொறுத்தான முரண்பாடுகள் அரசுத்தரப்பு வழக்கை பாதிப்படைய வைக்கிறது எனவும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளான அசா–3 அசா–4 ஆகியோர்கள் அசா–2 ன் வலது கையில் எந்த பகுதியில் காயம் ஏற்பட்டது என்று சாட்சியம் அளிக்கவில்லை எனவும், காயம்பட்ட அசா–2 மற்றும் எதிரிகள் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள்

என்றும் இரண்டு சமூதாயத்திற்கும் ஊரில் பிரச்சனை இருந்து வந்ததால் வேறு யாரோ தாக்கிய காயத்தை வைத்துக் கொண்டு எதிரிகள் தலித் சமூதாயத்தை சேர்ந்தவர்கள் என்பதினால் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

14. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில் எதிரிகள் அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவரை பார்த்து அவதூரான வார்த்தைகளால் பேசியதாகவும், 2 வது எதிரி அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவரை கையால் முதுகில் அடித்து கீழே தள்ளி சிறு காயத்தை ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரி 1ம் எதிரியை பார்த்து "ஏய் பசுபதி இந்த கூதி மகனை வெட்டுல என்று சொல்லி" தூண்டியபோது 1ம் எதிரி சட்டையின் பின்புறம் முதுகில் மறைத்து வைத்திருந்த நீளமான வாளால் சாட்சி –2 ஸ்டீபன்சன்ராஜை பார்த்து "சாணாப்புண்டமகனே இத்தோட செத்து தொல என்று ஓங்கி தலையை நோக்கி வெட்டியதாகவும்" அதனை அசா–2 வலது கையால் தடுத்தினால் அந்த வெட்டு வலது கையில் பட்டு கொடுங்காயம் ஏற்பட்டதாகவும் எதிரிகள் அசா–2 ஐ கொலை செய்ய முயற்சி செய்ததாகவும் கூறப்பட்டு 1 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 307 –ன் படியும், 2 ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 307 உ/இ 34 மற்றும் 307 உ/இ 109 –ன் படியும் குற்றம் சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

15. அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 11.10.20215 இரவு 8.45 மணிக்கு தான் கணேசன் பலசரக்கு கடைக்கு சென்று பலசரக்கு சாமான்களை வாங்கி கொண்டு கையில் குச்சிமுட்டாய் வாங்கி சாப்பிட்டு கொண்டு வந்து கொண்டிருந்ததாகவும் எதிரிகள் அங்கு நின்று கொண்டு தன்னை பார்த்து "குச்சிமுட்டாயை சுண்ணியை சூப்பிறமாறி சூப்புகிறாய்" என்று அசிங்கமாக பேசியதாகவும் தான் அதற்கு "ஏன் இப்படி

அசிங்கமாக பேசிகிறீர்கள்" என்று கேட்டபோது எதிரிகள் இருவரும் "சாணா கூதி மக்கள் எங்களை எதிர்த்து பேசுற அளவிற்கு வளந்தீட்டீர்களா" என கூறியதாகவும் "சாணா பயல்கள் இரண்டுபேரையாவது போட்டுத்தள்ளனும்று நினைத்தேன் நீ வந்து மாட்டிக்கிட்டாய்" என்று 2ம் எதிரி பழனிச்சாமி தன்னை பார்த்து கூறிக்கொண்டு முதுகில் கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாகவும், 1ம் எதிரி பசுபதி குமாரை பார்த்து 2ம் எதிரி பழனிச்சாமி தன்னை வெட்டுமாறு கூறினார் எனவும் 1ம் எதிரி பசுபதிகுமார் பின்பக்கம் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து "சாணா புண்டமவனை இத்தோடு செத்து தொலை" என்று கூறி தன் தலையை பார்த்து ஓங்கி வெட்டினார் எனவும் அதை தான் வலது கையால் தடுத்துவிட்டதாகவும் அதனால் வலது கை மணிக்கட்டில் எலும்பு, நரம்பு வெட்டுப்படும் அளவு காயம் ஏற்பட்டது எனவும் அக்கம் பக்கத்தில் நின்ற ராஜசேகர், ஆதி நாராயணன், ஜெயபால், பழனி கணபதி ஆகியோர்கள் சத்தம் போட்டார்கள் எனவும் எதிரிகள் இருவரும் அங்கிருந்து வாளுடன் ஓடிக்கொண்டார்கள் எனவும் சம்பவத்தை குறித்து தன் அப்பாவிற்கு ராஜசேகர் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னார் எனவும் பின்னர் தன்னை ஆதிநாராயணன் மற்றும் ராஜசேகர் ஆகியோர்கள் சேர்ந்து செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் எனவும் செங்கோட்டை மருத்துவமனைக்கு தன் அப்பா வந்துவிட்டார் எனவும் அங்கு முதல் உதவி சிகிச்சை செய்யப்பட்டு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள் எனவும் அங்கு வெட்டுபட்ட கையை முறித்து விடவேண்டும் எனவும் சொன்னதால் தன் அப்பா நாகர்கோவில் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் திரவியம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் கூறியுள்ளார்.

16. அசா–3 ஆதிநாராயணன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 11.10.2015 ம் தேதி இரவு சுமார் 8.45 மணியளவில் தானும் சேகர் என்பவரும் ஜெயபால் வீட்டு முன்பு பேசி கொண்டிருந்த போது எதிரிகள் ஸ்டீபன் ராஜை

பார்த்து "என்னடா குச்சிமுட்டாயை சுண்ணியை சூப்புறமாறி சூப்புற" என்று அசிங்கமாக கேட்டார்கள் என்றும் ஸ்டிபன்ராஜ் "என்ன இப்படி அசிங்கமாக பேசுகிறீர்கள்" என்று திரும்ப கேட்டார் என்றும் உடனே எதிரிகள் இருவரும் "சாணாப்பயல்கள் எங்களை எதிர்த்து பேசுவீங்களோ என்று கேட்டுவிட்டு இரண்டு பேரையாவது வெட்ட வேண்டும் நீ வந்து மாட்டிக்கிட்ட" என்று கூறி ஸ்டீபன்ராஜை எதிரி பழனிச்சாமி கையால் அடித்து கீழே தள்ளினார் எனவும் எதிரி பசுபதிகுமார் வாளை எடுத்து ஸ்டீபன்ராஜ் தலையை நோக்கி வெட்டினார் எனவும் ஸ்டீபன்ராஜ் வலது கையால் அந்த வெட்டை தடுத்தபோது அவருடைய வலது கையில் வெட்டுபட்டு ரத்தம் வந்தது எனவும் தானும் சேகர் என்பவரும் ஸ்டீபன் அப்பாவுக்கு தகவல் சொன்னதாகவும் பின்னர் ஸ்டீபன்ராஜை தானும் அவரது அப்பாவும் சேர்ந்து செங்கோட்டை மருத்துவமனைக்கு எடுத்து சென்றதாகவும் கூறியுள்ளார்.

17. அசா–4 ராஜசேகர் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 8 வருடங்களுக்கு முன்பு ஜெயபால் வீட்டிற்கு முன்பு தான் வந்து கொண்டிருந்த போது அந்த இடத்தில் சத்தம் கேட்டது எனவும் அங்கு சென்று பார்த்த போது ஸ்டீபன்ராஜ் கையில் காயம் ஏற்பட்டு வலது கையில் ரத்தம் வந்து கொண்டிருந்தது எனவும் 1ம் எதிரி வாளை கொண்டு ஸ்டீபன்ராஜை வெட்டிவிட்டு வாளுடன் நின்று கொண்டிருந்தார் எனவும் அங்கு நின்றிருந்தவர்கள் சத்தம் போடவும் அவர் ஓடிவிட்டார் எனவும் காயம்பட்டவரின் தந்தைக்கு போன் செய்தவுடன் அவர் அங்கு வந்து காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் எனவும் கூறியுள்ளார்.

18. எதிரிகள் ஸ்டீபன்ராஜை பார்த்து பொது இடத்தில் வைத்து "என்ன குச்சிமுட்டாயை சுண்ணியை சூப்புறமாறி சூப்புற" என்று அசிங்கமாக பேசியதாக எதிரிகள் மீது இதச பிரிவு 294(பி) ன்படி குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சாட்சியான அசா–2 ஸ்டீபன்ராஜ் மற்றும் கண்ணுற்ற சாட்சியான அசா–3 ஆதிநாராயணன் ஆகியோர்கள் தங்களுடைய சாட்சியத்தில் எதிரிகள்

அசிங்கமான வார்த்தைகள் பேசியதாக கூறி இருந்தாலும் அதனால் தங்களுக்கு அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் சம்பவ இடம் பொது இடம் என்றோ அல்லது சம்பவ இடத்திற்கு அருகில் பொது இடம் இருந்ததாகவே அசா–2, அசா–3 ஆகியோர்கள் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(பி) ன்படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. அரசுத்தரப்பில் 2ம் எதிரி பழனிச்சாமி அசா–2 ஸ்டீபன்ராஜை கையால் முதுகில் அடித்து கீழே தள்ளி சிறு காயம் ஏற்படுத்தியதாகவும் "ஏய் பசுபதி இந்த கூதி மகனை வெட்டுல" என்று 2ம் எதிரி சொன்னவுடன் 1ம் எதிரி பசுபதிகுமார் வாளால் ஸ்டீபன்ராஜை வெட்டியதாகவும் கூறப்பட்டு 2ம் எதிரி மீது இதச பிரிவு 307 உ/இ 109 மற்றும் 307 உ/இ 34 ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 1ம் எதிரி அசா–2 ஐ வெட்டுவதற்கு 2ம் எதிரி தூண்டியதாக அசா–2 ன் சாட்சியத்தை ஒத்து கண்ணுற்ற சாட்சியான அசா–3 ஆதிநாராயணன் என்பவர் சாட்சியம் அளிக்கவில்லை. அசா–4 ராஜசேகர் என்பவரும் சம்பவயிடத்தில் 2ம் எதிரி நின்றதாக சாட்சியம் அளிக்கவில்லை. அசா–2 தன்னுடைய சாட்சியத்தில் 2ம் எதிரி பழனிச்சாமி முதுகில் கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாக கூறியுள்ளார். அசா–3 ஆதிநாராயணன் என்பவரும் தன்னுடைய சாட்சியத்தில் எதிரி பழனிச்சாமி, ஸ்டீபன்ராஜை கையால் அடித்து கீழே தள்ளியதாக கூறியுள்ளார். அசா–2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அசா–9 கங்காதேவி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் அசா–1 ன் முதுகில் காயம் இருந்ததாக எதுவும் கூறவில்லை. 2ம் எதிரி பழனிச்சாமி என்பவரின் தூண்டுதலின் பேரில் 1ம் எதிரி அசா–2 ஐ வாளால் வெட்டியதாக அசா–2 ன் சாட்சியத்தை ஒத்து இதர கண்ணுற்ற சாட்சிகள் சாட்சியம் அளிக்காத நிலையில் 2ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 307 உ/இ 109 மற்றும் 307 உ/இ 34 ன்படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம்

செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. 1ம் எதிரி குமார் (எ) பசுபதிகுமார் அசா–2 ஸ்டீபன்ராஜை பார்த்து "சாணாப்புண்டமகனே இத்தோட செத்து தொல" என்று கூறி ஓங்கி தலையை நோக்கி வெட்டியபோது ஸ்டீபன்ராஜ் வலது கையால் தடுத்ததால் வலது கையில் கொடுங்காயம் ஏற்பட்டு கொலை முயற்சி செய்ததாக கூறப்பட்டு 1ம் எதிரி குமார் (எ) பசுபதிகுமார் என்பவர் மீது இதச பிரிவு 307 ன்படி குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அசா–2 ஸ்டீபன்ராஜ் தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரி பசுபதிகுமார் பின்புறம் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து "சாணாப்புண்டமகனே இத்தோட செத்து தொல" என்று கூறி தன் தலையை பார்த்து ஓங்கி வெட்டினார் எனவும் தான் வலது கையால் தடுத்தபோது வலது கை மணிக்கட்டு எலும்பு, நரம்பு வெட்டுபடும் அளவுக்கு காயம் ஏற்பட்டது எனவும் கூறியுள்ளார். அசா–2 ன் சாட்சியத்தை ஒத்து கண்ணுற்ற சாட்சியான அசா–3 ஆதிநாராயணன் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அசா–4 ராஜசேகர் என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறவில்லை என்றாலும் அசா–2 ன் வலது கையில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்ததாகவும் 1ம் எதிரி வாளுடன் நின்று கொண்டிருந்ததாகவும் கூறியுள்ளார்.

21. அசா–1 அரசமுத்து என்பவர் அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவரின் தந்தை ஆவார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் 11.10.2015 தேதியில் இரவு 8.45 மணிக்கு எதிரிகள் தன்னுடைய மகன் ஸ்டீபன்சன்ராஜை வெட்டியதாக போன் மூலம் தனக்கு தகவல் கிடைத்து. சம்பவயிடத்திற்கு சென்று தன்னுடைய மகனை செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் அங்கு முதல் உதவி செய்துவிட்டு திரவியம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் மறுநாள் காவல் நிலையம் சென்று அசாஆ–1 புகார் மனு கொடுத்ததாகவும் கூறியுள்ளார்.

22. அசா–11 உதவி ஆய்வாளர் ஜெயசங்கரன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 12.10.2015 ம் தேதி 12.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த

போது அரசமுத்து என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அசாஆ–10 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக கூறியுள்ளார். எதிரிதரப்பில் சம்பவத்திற்கு மறுநாள் புகார் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் அரசுத்தரப்பில் தெளிவுப்படுத்தப்படவில்லை எனவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததில் ஏற்பட்ட காலதாமதம் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனவும் கூறப்பட்டுள்ளது. அசா–1 கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ள அசாஆ–1 புகார் மனுவில் 11.10.2015 ம் தேதி இரவு 8.45 மணிக்கு வல்லம் நடுத்தெரு முக்கில் ஜெயபால் வீட்டு முன்பு வைத்து சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசாஆ–10 முதல் தகவல் அறிக்கையில் 12.10.2015 அன்று 12.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

23. அசா–1 அரசமுத்து, அசா–2 ஸ்டீபன்ராஜ், அசா–3 ஆதிநாராயணன் ஆகியோர்கள் தங்களுடைய சாட்சியத்தில் சம்பவம் நடந்தவுடன் செங்கோட்டை மருத்துவமனைக்கு அசா–2 சிகிச்சைக்கு சென்றதாகவும் அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் பின்னர் நாகர்கோவில் திரவியம் மருத்துவமனையில் அசா–2 மேல் சிகிச்சை எடுத்து கொண்டதாகவும் கூறியுள்ளார்கள். அசா–2 க்கு முதல் சிகிச்சை அளித்த மருத்துவர் அசா–9 கங்காதேவி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 11.10.2015 ம் தேதி இரவு 8.50 மணியளவில் ஸ்டீபன்ராஜ் என்பவர் தன்னிடன் சிகிச்சைக்கு வந்ததாக கூறியுள்ளார். அசா–2 ற்கு மேல் சிகிச்சை அளிக்கப்பட்ட திரவியம் எலும்பு முறிவு மருத்துவமனை மருத்துவ அதிகாரி அசா–10 ரமேஷ் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 12.10.2015 அன்று 2.20 மணியளவில் ஸ்டீபன்ராஜ் என்பவர் சிகிச்சைக்கு சேர்ந்ததாக கூறியுள்ளார்.

24. அசா–1 தன்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவம் நாள் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு காவல் நிலையத்திற்கு வந்து சம்பவத்தை பற்றி கூறவில்லை எனவும் தன்னுடைய மகனின் கையை சரி

செய்யதான் தான் முயற்சி செய்ததாகவும் கூறியுள்ளார். காயம்பட்ட நபர் சம்பவம் நடந்த சிறிது நேரத்திற்குள் செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றதாக செங்கோட்டை அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு அசாஆ–8 ஐ பார்க்கும் போது தெரியவருகிறது. மேலும் காயம்பட்ட நபர் சம்பவத்திற்கு மறுநாள் நாகர்கோவில் திரவியம் மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும் அவரின் வலது கை மணிக்கட்டு எலும்பு உடைந்து இருந்ததாகவும், நரம்புகள் அறுபட்டு இருந்ததாகவும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. இந்த வழக்கில் காயம்பட்ட அசா–2 ன் தந்தையான அசா–1 அரசமுத்து என்பவர் சம்பவத்திற்கு மறுநாள் காவல் நிலையத்திற்கு சென்று புகார் மனு கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அசா–2 ன் தந்தையான அசா–1 செங்கோட்டையில் இருந்து சுமார் 130 கி.மீ க்கு மேல் தூரம் இருக்கும் நாகர்கோவில் திரவியம் மருத்துவமனையில் அசா–2 ஐ கொண்டு வந்து மேல் சிகிச்சைக்காக சேர்த்து அங்கு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அசா–1, தனது மகனான அசா–2 ஐ மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிப்பதற்கு முயற்சி எடுத்துள்ள நிலையில் அவரால் செங்கோட்டை காவல் நிலையத்திற்கு வந்து சம்பவம் நடந்தவுடன் புகார் கொடுத்திருக்க வாய்ப்பில்லை. மேலும் அசா–2 ற்கு ஏற்பட்ட காயங்கள் ஆழமான எலும்பு முறிவு, நரம்பு அறுபட்ட காயமாக உள்ள நிலையில் அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க தான் அவருடைய தந்தையான அசா–1 முயற்சி செய்திருப்பார். இந்நிலையில் அசா–1 சம்பவத்திற்கு மறுநாள் புகார் கொடுத்து அதனடிப்படையில் காலதாமதத்துடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட காரணத்தால் இந்த வழக்கில் சந்தேகம் எதுவும் ஏற்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

25. அசா–2 க்கு செங்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் அசா–9 கங்காதேவி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் அசா–1 ன் வலது கை மணிக்கட்டில் 15 x 10 x 3 செமீ அளவிற்கு ஆழமான வெட்டுக்காயம்

இருந்ததாகவும் எலும்பு வெளியே தெரிந்து கொண்டிருந்ததாகவும் அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்ததாகவும், தனியார் மருத்துவமனையில் எடுத்த சிகிச்சை விபரங்களை பார்த்து அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என அசாஆ–8 காயச்சான்று வழங்கியதாகவும் கூறியுள்ளார். அசா–2 க்கு மேல் சிகிச்சை அளிக்கப்பட்ட திரவியம் எலும்பு முறிவு மருத்துவமனை மருத்துவர் அசா–10 ரமேஷ் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 12.10.2015 தேதியில் தான் பணியில் இருந்த போது ஸ்டீபன்சன்ராஜ் தன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் எனவும் அவரது வலது உள்ளங்கையில் முன்புறமாகவும், உள்புறமாகவும் 12 x 6 x 2.5 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது எனவும் அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் மணிக்கட்டு பகுதியில் மணிக்கட்டு முத்தெலும்புகளில் ஒன்று உடைந்து காணப்பட்டது எனவும் அறுபட்ட அசைவு நரம்புகளும், இரத்தக் குழாய்களும் வெளியே தெரியும்படி காணப்பட்டது எனவும் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 15.10.2015 அன்று விடுவிக்கப்பட்டார் எனவும் அவருடைய காயம் கொடுங்காயம் என தான் சான்று அசாஆ–9 வழங்கியதாகவும் கூறியுள்ளார்.

26. எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கிறஞர் தன்னுடைய வாதத்தில் அசா–2 ன் வலது உள்ளங்கையில் காயம் இருந்ததாக முதலில் சிகிச்சை அளித்த மருத்துவர் அசா–9 கூறவில்லை எனவும் அசா–2 ம் தன்னுடைய சாட்சியத்தில் வலது உள்ளங்கையில் வெட்டுப்பட்டதாக கூறவில்லை எனவும் எனவே காயத்தை பொறுத்து அசா–9, அசா–10 மருத்துவர்களின் சாட்சியங்களில் முரண்பாடுகள் உள்ளது எனவும் கூறியுள்ளார். அசா–9 மருத்துவர் கங்காதேவி தன்னுடைய சாட்சியத்தில் அசா–2 ன் வலது கை மணிக்கட்டில் வெட்டுக்காயம் இருந்ததாக கூறியுள்ளார். அசா–10 மருத்துவர் ரமேஷ் தன்னுடைய சாட்சியத்தில் வலது கை மணிக்கட்டில் உள்ள முத்தெலும்பில் ஒன்று உடைந்து காணப்பட்டதாக கூறியுள்ளார். காயத்தின் அளவை பார்க்கும் போது அது மிக நீளமான ஆழமான காயமாக தெரியவருகிறது. அசா–10 மருத்துவர் வழங்கிய அசாஆ–9

காயச்சான்றை பார்க்கும் போது அதில்

"Incised wound 12x6x2.5 cm over antero medial aspect of right palm extending to hypothenar, thenar aspect and wrist raising proximally based flap exposing cut tendons, nerves, vessels and bones, active bleeding present. Fracture pisiform."

என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை பார்க்கும் போது அசா–2 ற்கு உள்ளங்கையில் இருந்து மணிக்கட்டு வரைக்கும் காயம் இருந்ததாக தெரியவருகிறது. செங்கோட்டை அரசு மருத்துவமனையில் அசா–2 க்கு முதல் சிகிச்சை மட்டும் தான் கொடுக்கப்பட்டுள்ளது. அசா–2 க்கு மேல் சிகிச்சை வழங்கிய மருத்துவமனை சிகிச்சை குறிப்புகளில் வலது உள்ளங்கையில் இருந்து மணிக்கட்டு வரைக்கும் அசா–2 க்கு காயம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அசா–2 க்கு வலது கை மணிக்கட்டுப் பகுதியில் எலும்பு முறிவு இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் காயத்தை பொறுத்து அசா–9, அசா–10 ஆகியோர்களின் சாட்சியங்களில் உள்ள சிறு முரண்பாடுகள் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

27. அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் நடுத்தெருவில் உள்ள ஜெயபால் என்பவரின் வீட்டு அருகே சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார். அசா–2 ன் சாட்சியத்தை ஒத்து அசா–3 ஆதிநாராயணன் என்பவரும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் மனு அசாஆ–1 முதல் தகவல் அறிக்கை அசாஆ–10 ஆகியவற்றில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. புலன் விசாரணை அதிகாரி அசா–12 சார்பு ஆய்வாளர் பிரதாபன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 12.10.2015 அன்று 13.00 மணியளவில் சாட்சிகள் ஜேம்ஸ் மற்றும் ஜோசப் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அசாஆ–11 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ–12 தயார் செய்ததாக கூறியுள்ளார். அசாஆ–12 மாதிரி வரைபடத்தை பார்க்கும் போது ஜெயபால் என்பவரின் வீட்டு முன்னால் சம்பவம் நடந்ததாக காட்டப்பட்டுள்ளதாக

தெரியவருகிறது. இந்நிலையில் சம்பவ இடம் குறித்து அரசுத்தரப்பு வழக்கிற்கும் சம்பவ சாட்சிகளின் சாட்சியங்களுக்கும் முரண்பாடுகள் எதுவும் இல்லை என அறிய முடிகிறது.

28. எதிரித்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் காயமடைந்தவர் அசா–9 மருத்துவர் கங்காதேவி என்பவரிடம் 11.10.2015 இரவு 8 மணியளவில் அருவாளால் ஒரு நபர் வெட்டியதாக கூறியுள்ளார் எனவும் அசா–10 மருத்துவர் ரமேஷ் என்பவரிடம் 11.10.2015 தேதியில் 21.30 மணியளவில் தாக்குதலில் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார் எனவும் சம்பவ நேரத்தை பொறுத்து அரசுத்தரப்பு வழக்கிற்கும் சாட்சிகளின் சாட்சியத்திற்கும் முரண்பாடுகள் உள்ளது எனவும் கூறியுள்ளார்.

29. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் 11.10.2015 இரவு 8.45 மணியளவில் சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார். அவருடைய சாட்சியத்தை ஒத்து கண்ணுற்ற சாட்சியான அசா–3 ஆதிநாராயணன் என்பவரும் தன்னுடைய சாட்சியத்தில் 11.10.2015 இரவு 8.45 மணியளவில் சம்பவம் நடந்ததாக கூறியுள்ளார். அசாஆ–1 புகார் மனுவில் இரவு 8.45 மணியளவில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசாஆ–10 முதல் தகவல் அறிக்கையில் 8.30 மணியளவில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. 11.10.2015 இரவு 8.50 மணியளவில் அசா–2 செங்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்ததாக அசா–9 மருத்துவர் கங்காதேவி என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அசா–9, அசா–10 மருத்துவர்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. இந்நிலையில் காயம்பட்டவர் மருத்துவரிடம் முரண்பட்டு நேரத்தை குறித்து சாட்சியம் அளித்துள்ளதாகவும் அதனால் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகம் ஏற்படுகிறது என்ற எதிரிதரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அசாஆ–10 முதல் தகவல் அறிக்கையில் நேரத்தை குறித்தான சிறு முரண்பாடு அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

30. அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரி தன்னை வாளால் தலையை நோக்கி வெட்டியபோது வலது கையால் தடுத்தபோது வலது கையில் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். அசா–3 ஆதிநாராயணன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரி வாளால் அசா–2 ஐ தலையை நோக்கி வெட்டியதாகவும் அசா–2 வலது கையால் தடுத்ததாகவும் அப்போது வலது கையில் வெட்டுபட்டதாகவும் கூறியுள்ளார். அசா–4 ராஜசேகர் என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் தான் சென்ற போது 1ம் எதிரி வாளுடன் நின்று கொண்டிருந்ததாக கூறியுள்ளார்.

31. புலன் விசாரணை அதிகாரி அசா–12 பிரதாபன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 12.10.2015 அன்று 16.00 மணிக்கு எதிரிகளை செங்கோட்டை வல்லம் சிலுவைமுக்கு அருகில் கைது செய்ததாகவும் 1ம் எதிரி குமார் என்பவர் சாட்சிகள் அசோக் மற்றும் பண்டிட்மோதிலால் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி பழனிச்சாமி என்பவரின் வீட்டின் அருகே உள்ள ஒரு செல்போன் டவர் அருகே இருந்து 1ம் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய 81 செமீ நீளம் கொண்ட வாளை சாட்சிகள் முன்பு அத்தாட்சி அசாஆ–14 பிறப்பிக்கப்பட்டு கைப்பற்றியதாகவும் கூறியுள்ளார். அசா–2 தன்னுடைய சாட்சியத்தில் புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் இருந்த வாளை அடையாளம் காண்பித்து அந்த வாளை வைத்து தான் எதிரி பசுபதிகுமார் தன்னை வெட்டியதாக கூறியுள்ளார். அந்த வாள் அசாபொ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அசா–3 ஆதிநாராயணன் என்பவரும் அசாபொ–1 வாளால் தான் எதிரி பசுபதி குமார் அசா–2 ஐ வெட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

32. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அசா–6 பண்டிட்மோதிலால் என்பவர் தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் குமார் (எ) பசுபதிகுமார் என்பவரை வல்லம் சிலுவைமுக்கில் மாலை 4 மணியளவில் போலீசார் கைது செய்ததாக கூறியுள்ளார். மேலும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் என்ன எழுதி

உள்ளது என்று தனக்கு தெரியாது என்றும் கூறியுள்ளார். எனவே அவர் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக்கப்பட்டுள்ளார். இன்னொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அசா–8 அசோக் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் காவல் நிலையத்தில் சென்றபோது எழுதாத வெள்ளை பேப்பரில் தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும் இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு தெரியாது எனறும் கூறியுள்ளார். எனவே அவரும் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக்கப்பட்டுள்ளார். அசாஆ–14 அத்தாட்சியை பார்க்கும் போது 12.10.2015 ம் தேதி 17.30 மணிக்கு வல்லம் பழனிச்சாமி வீட்டின் அருகே உள்ள செல்போன் டவர் அடியில் இருந்து வாள் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

33. எதிரிதரப்பில் காயம்பட்ட அசா–2 மருத்துவரிடம் அருவாளால் தாக்கப்பட்டதாக கூறியுள்ளதாக அசா–9 மருத்துவர் சாட்சியம் அளித்துள்ளார் எனவும் எனவே ஆயுதத்தை பொறுத்து அரசுத்தரப்பு வழக்கில் முரண்பாடுகள் உள்ளது எனவும் அசாபொ–1 வாளில் இரத்தக்கறை ஏதும் இல்லை எனவும் எனவே அசாபொ–1 வாளால் அசா–2 ற்கு காயம் ஏற்பட்டதாக கருத முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது. காயம்பட்டவர் என்ன ஆயுதத்தால் தாக்கப்பட்டார் என்பது குறித்தான மருத்துவரின் சாட்சியம் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் மருத்துவர்களான அசா–9 மற்றும் அசா–10 ஆகியோர்கள் தங்களுடைய சாட்சியத்தில் அசா–2 ற்கு ஏற்பட்ட காயம் வாளால் வெட்டுபடும் போது ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறியுள்ளார்கள். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகளான அசா–6 பண்டிட்மோதிலால், அசா–8 அசோக் ஆகியோர்கள் பிறழ்சாட்சிகளாக இருந்தாலும் அசா–12 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியம் நம்பத்தகுந்ததாக உள்ளது. மேலும் அசாபொ–1 வாளால் அசா–2 ஐ 1ம் எதிரி தாக்கியதாக அசா–2, அசா–3 ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். அசஆ–1 புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகிய ஆவணங்களிலும் 1ம் எதிரி அசா–2 ஐ வாளால் வெட்டியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

அசாபொ–1 வாளில் ரத்தக்கறை இருந்ததா இல்லையா என்று அறிய தடய அறிவியல் துறைக்கு அனுப்பப்படவில்லை. இந்நிலையில் வாளில் இரத்தக்கறை இருந்தது என்றோ இல்லை என்றோ கருத முடியாது. மேலும் வாளில் இரத்தக்கறை இல்லை என்பதால் அந்த வாள் வைத்து அசா–2 தாக்கப்படவில்லை என கருத முடியாது. இந்நிலையில் ஆயுதத்தை பொறுத்து அரசுத்தரப்பு வழக்கில் முரண்பாடுகள் எதுவும் இல்லை என அறிய முடிகிறது.

34. எதிரிதரப்பில் அசா–2 ற்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் எனவே அசா–2 ற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருதமுடியாது எனவும் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அசா–2 ற்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் அசா–1 ற்கு மேல் சிகிச்சை வழங்கிய திரவியம் மருத்துவமனை மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழ் அசாஆ–9 ல் அசா–2 ற்கு 12.10.2015 அன்று வலது கைக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டதாகவும் அதில் எலும்பு முறிவு இருந்ததாகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசா–2 க்கு வலது கை மணிக்கட்டு பகுதியில் எலும்பு முறிவு மற்றும் நரம்புகள் அறுபட்டு இருந்ததாகவும் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும் அவருடைய காயம் கொடுங்காயம் என்றும் மருத்துவர் அசா–10 சாட்சியம் அளித்துள்ளார். அசா–9 கங்காதேவி என்பவரும் அசா–2 ற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளார். இந்நிலையில் நுண்கதிர் படம் தாக்கல் செய்யவில்லை என்பதால் அசா–2 ற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் இல்லை என கருத முடியாது. எனவே எதிரி தரப்பு இந்த வாதம் ஏற்புடையது இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

35. அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரி "சாணா புண்டமவனே இத்தோடு செத்து தொலை" என்று கூறி தன்னை அருவாளால் தலையை நோக்கி வெட்ட வந்ததாகவும் தான் கையால் தடுத்ததால் அந்த வெட்டு கையில் பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அசா–2 ற்கு கையில் எலும்பு முறிவு மற்றும் நரம்பு அறுப்படும் அளவில் ஆழமான காயம்

ஏற்பட்டுள்ளது. எதிரிதரப்பில் 1ம் எதிரிக்கும் அசா−2 ற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததாக அசா−2 சாட்சியம் அளிக்கவில்லை எனவும் இந்நிலையில் 1ம் எதிரிக்கு அசா−2 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்ததாக கருதமுடியாது எனவும் 1ம் எதிரி அசா−2 ஐ ஒரே ஒருமுறைதான் வெட்டியதாக அரசுத்தரப்பு வழக்கு உள்ளது எனவும் 1ம் எதிரிக்கு அசா−1 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் மீண்டும் மீண்டும் வெட்டியிருப்பார் எனவும் கூறப்பட்டுள்ளது.

36. அசா−2 ற்கு கையில் ஏற்பட்ட காயத்தை பார்க்கும் போது அந்த வெட்டு அசா−2 ன் தலையில் பட்டுயிருந்தால் நிச்சயமாக அசா−2 ற்கு இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் 1ம் எதிரி அசா−2 ஐ வெட்டும் போது "சாணா புண்டமவனே இத்தோடு செத்து தொலை" என்று கூறி வெட்டியதாக அசா−2 சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரிதரப்பிலும் அசா−2 ம் எதிரிகளும் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் எனவும் ஊரில் அது குறித்து பிரச்சனை இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. 1ம் எதிரி அசா−2 ன் தலையை நோக்கி வாளால் வெட்ட வந்துள்ள நிலையிலும் அந்த வெட்டு அசா−2 ன் வலது கையில் பட்டு ஆழமான கொடுங்காயம் ஏற்பட்டுள்ள நிலையிலும் 1ம் எதிரிக்கு அசா−2 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மற்றும் வாளால் தலையில் தாக்கினால் இறப்பு ஏற்படும் என்ற அறிவு இருந்ததாக கருதமுடிகிறது. மேலும் பலமுறை 1ம் எதிரி அசா−2 ஐ வெட்டி இருந்தால் மட்டும் தான் 1ம் எதிரிக்கு அசா−2 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்ததாக கருதமுடியும் என்ற எதிரிதரப்பு வாதம் ஏற்றுக்கொள்ள முடியாது என இந்நீதிமன்றம் கருகிறது.

37. எதிரிதரப்பில் சம்பவயிடத்திற்கு அருகில் அசா−3, அசா−4 ஆகியோரின் வீடு இல்லை எனவும் வேறு பகுதியில் வசித்து வரும் அசா−2 ன் சமுதாயத்தை சேர்ந்த நபர்களை கண்ணுற்ற சாட்சிகளாக போடப்பட்டுள்ளது எனவும் அசா−3, அசா−4 ஆகியோர்கள் எதிரியை தடுப்பதற்கு முயற்சி செய்யவில்லை எனவும் இந்நிலையில் அவர்கள் சம்பவத்தை பார்த்துள்ளதாக

கருத முடியாது எனவும் இந்நிலையில் அசா–3, அசா–4 ஆகியோரின் சாட்சியங்கள் நம்பதகுந்ததல்ல எனவும் சம்பவ இடத்தில் வெளிச்சம் இருந்ததாக சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது. 1ம் எதிரி அசா–2 ஐ அருவாளால் தலையை நோக்கி வெட்ட வந்ததாகவும் அதனை அசா–2 வலது கையால் தடுத்ததாகவும் அதனால் அசா–2 ற்கு வலது கையில் காயம் ஏற்பட்டதாகவும் அசா–2 ன் சாட்சியத்தை ஒத்து அசா–3 ஆதிநாராயணன் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார். அசா–4 சேகர் என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்தாக சாட்சியம் அளிக்கவில்லை. ஆனால் அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் அங்கு சென்ற பார்த்த போது 1ம் எதிரி அசா–2 ஐ வெட்டிவிட்டு வாளுடன் நின்று கொண்டிருந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அசா–2 ற்கு ஏற்பட்ட காயத்தை பொறுத்து அசா–2 ன் சாட்சியத்திற்கும் மருத்துவரான அசா–9, அசா–10 ஆகியோரின் சாட்சியத்திற்கும் முரண்பாடுகள் எதுவுமில்லை. அசா–2, அசா–3 ஆகியோரின் சாட்சியங்கள் நம்பதகுந்ததாக உள்ளது. மேலும் அசாஆ–12 வரைபடத்தை பார்க்கும் போது அதில் சம்பவ இடத்தின் அருகில் இ.பி. போல் இருந்ததாக காட்டப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சம்பவ சாட்சிகளிடமோ, புலன் விசாரணை அதிகாரியிடமோ இது குறித்து கேள்வி எதுவும் எழுப்பவில்லை. மேலும் அசா–2 ற்கு எதிரிகள் ஏற்கனவே அறிமுகம் உள்ள நபர்கள் என அசா–2 ன் சாட்சியத்திலிருந்து அறிய முடிகிறது. அசா–3, அசா–2 ன் சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதினால் அவரின் சாட்சியம் நம்பதகுந்ததல்ல என நிராகரித்து விடமுடியாது. இந்நிலையில் எதிரிதரப்பு இந்த வாதம் ஏற்றுக்கொள்ள இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

38. இந்த வழக்கில் சம்பவ இடம் சம்பவ நேரம் சம்பவ நாள் குறித்து அரசுத்தரப்பு வழக்கிற்கும் சம்பவ சாட்சிகளின் சாட்சியத்திற்கும் மிக்க முரண்பாடுகள் எதுவுமில்லை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு இருந்தாலும் காயம்பட்ட அசா–2 சம்பவ நடந்த சிறு நேரத்திற்கு உள்ளாகவே செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு

சென்றுள்ளார். அசா–2 ன் தந்தை மேல் சிகிச்சைக்காக சுமார் 130 கிமீ தூரம் உள்ள திரவியம் மருத்துவமனையில் அசா–2 ஐ சேர்த்துவிட்டு மறுநாள் அசா–1 புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் புகார் மனு கொடுக்க ஏற்பட்ட காலதாமதம் அரசுத்தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை. அசா–2 ற்கு ஏற்பட்ட காயத்தை பொறுத்து அரசுத்தரப்பு வழக்கிற்கும் அசா–2 ன் சாட்சியத்திற்கும் மருத்துவர்களான அசா–9, அசா–10 ஆகியோரின் சாட்சியத்திற்கும் முரண்பாடுகள் எதுவுமில்லை. 1ம் எதிரி அசா–2 ஐ பார்த்து "சாணா புண்டமவனே இத்தோடு செத்து தொலை" என கூறி தலையில் வாளால் வெட்டி கொடுங்காயம் ஏற்படுத்தி உள்ள நிலையில் 1ம் எதிரிக்கு அசா–2 ஐ கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மற்றும் இறப்பு ஏற்படும் என்ற அறிவு இருந்துள்ளதாக கருதமுடிகிறது. அசா–2 ஐ 1ம் எதிரி தாக்க பயன்படுத்தியதாக கூறப்பட்ட அசாபொ–1 வாள் புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் அந்த வாளை வைத்து தான் தன்னை தாக்கியதாக அசா–2 சாட்சியம் அளித்துள்ளார். அந்த சாட்சியத்தை ஒத்து அசா–3ம் சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை குறித்து அசா–1, அசா–3 ஆகியோரின் சாட்சியங்கள் நம்பத்தகுந்ததாக உள்ளது. எதிரிதரப்பில் அசா–2 ஐ வேறு யாரோ தாக்கியதால் காயம் ஏற்பட்டதாகவும் அதனை வைத்துக் கொண்டு எதிரிகள் மீது இருந்த காழ்புணர்ச்சி காரணமாக பொய்யாக இந்த புகார் கொடுக்கப்பட்டதாக கூறியிருந்தாலும், அது குறித்தான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் எதிரிதரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

39. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து, அரசுத்தரப்பில் 1ம் எதிரி மீது சுமத்தப்பட்ட இதச பிரிவு 307 ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே 1ம் எதிரி இதச பிரிவு 307 ன்படி குற்றவாளி எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

40. 1ம் எதிரி இதச பிரிவு 307–ன் படி குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து பிரிவு 235(ii) குவிமுசவின் கீழ் எதிரியிடம் தண்டனை குறித்து வினவியபோது "எனக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. எனக்கு ஆட்டிசம் பாதித்த குழந்தை உள்ளது. எனவே என்னை மன்னித்து விடுதலை செய்யவேண்டும்" என கூறினார்.

41. முடிவாக, 1ம் எதிரி மீதான இதச பிரிவு 294(பி) –ன் படியான குற்றச்சாட்டுகளும், 2ம் எதிரி மீதான இதச பிரிவுகள் 294(பி), 307 உ/இ 34 மற்றும் 307 உ/இ 109– ன்படியான குற்றச்சாட்டுகளும் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து, 1ம் எதிரியை இதச பிரிவு 294(பி) – ன் படியான குற்றங்களிலிருந்தும், 2ம் எதிரியை இதச பிரிவுகள் 294(பி), 307 உ/இ 34 மற்றும் 307 உ/இ 109 – ன் படியான குற்றங்களிலிருந்தும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்தும், 1ம் எதிரி மீதான இதச பிரிவு 307– ன் படியான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே 1ம் எதிரி மேற்கூறிய பிரிவின் கீழ் குற்றவாளி என்றும் தீர்மானித்து வழக்கின் தன்மை, எதிரியின் வயது, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, 1ம் எதிரி மீதான இதச பிரிவு 307– ன்படியான குற்றத்திற்கு தண்டனையாக **3 வருடங்கள் கடுங்காவல் சிறைதண்டனையும், அபராதம் ரூ.5000/–** விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் **3 மாதங்கள் மெய்காவல் சிறைதண்டனை** விதித்தும், குவிமுச பிரிவு 235(ii) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் 1ம் எதிரி விசாரணை காலத்தில் நீதிமன்ற காவலில் இருந்த 12.10.2015 முதல் 14.12.2015 வரையான நாட்களை 1ம் எதிரியின் சிறைத்தண்டனை காலத்தில் இருந்து கழித்துக் கொள்ள குவிமுச பிரிவு 428 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

42. பாதிக்கப்பட்ட அசா–2 ஸ்டீபன்சன்ராஜ் என்பவருக்கு குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 357 (A) ன்படி இழப்பீடு வழங்க தென்காசி மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டு தீர்ப்புரையின் நகலை அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

43. இவ்வழக்கில் பி.ஆர்.எண்.126/2024–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சுமார் 81 செமீ நீளமுள்ள வாள் ஒன்று பயனற்ற பொருள் என்பதினால் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின் அழிக்குமாறும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவுப்படி செயல்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் ஆகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.03.10 18:53:35 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> : –

| | | |
|---|---|---|
| அ.சா.1 | : | திரு. அரசமுத்து (புகார்தாரர்) |
| அ.சா.2 | : | திரு. ஸ்டீபன் சன்ராஜ் |
| அ.சா.3 | : | திருமதி. ஆதி நாராயணன் |
| அ.சா.4 | : | திரு. ராஜசேகர் |
| அ.சா.5 | : | திரு. ஜோசப் |
| அ.சா.6 | : | திரு. பண்டிட் மோதிலால் |
| அ.சா.7 | : | திரு. ஜேம்ஸ் |
| அ.சா.8 | : | திரு. அசோக் |
| அ.சா.9 | : | திருமதி. கங்காதேவி |
| அ.சா.10 | : | திரு. ரமேஷ் |

| | | |
|---|---|---|
| அ.சா.11 | : | திரு. ஜெயசங்கரன் (உதவி ஆய்வாளர்) |
| அ.சா.12 | : | திரு. பிரதாபன் (துணை கண்காணிப்பாளர்) |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–

<u>எண்.68ன் கீழான நீதிமன்ற படிவம்</u>

| வ. எண் | ஆவணப்பட்டியல் மற்றும் தேதி | | ஆவணப் பட்டியல் குறியீடு செய்த நாள் | எப்படி குறியீடு செய்யப் பட்டது | யார் மூலம் குறியீடு செய்யப் பட்டது | குறிப்பு கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 12.10.2015 | 08.03.2022 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | பார்வை மகஜரில் அசா–5 ன் கையெழுத்து. | 12.10.2015 | 10.09.2024 | அ.சா.ஆ.2 | அ.சா.5 | அசல் |
| 3. | ஒப்புதல் வாக்குமூலத்தில் அசா–6 ன் கையெழுத்து. | 12.10.2015 | 10.09.2024 | அ.சா.ஆ.3 | அ.சா.6 | அசல் |
| 4. | அத்தாட்சியில் அசா–6 ன் கையெழுத்து. | 12.10.2015 | 10.09.2024 | அ.சா.ஆ.4 | அ.சா.6 | அசல் |
| 5. | பார்வை மகஜரில் அசா–7 ன் கையெழுத்து | 12.10.2015 | 15.10.2024 | அ.சா.ஆ.5 | அ.சா.7 | அசல் |
| 6. | ஒப்புதல் வாக்குமூலத்தில் அசா–8 ன் 1வது கையெழுத்து. | 12.10.2015 | 15.10.2024 | அ.சா.ஆ.6 | அ.சா.8 | அசல் |
| 7 | அத்தாட்சியில் அசா–8 ன் 1வது கையெழுத்து. | 12.10.2015 | 15.10.2024 | அ.சா.ஆ.7 | அ.சா.8 | அசல் |
| 8 | காயச்சான்று | 11.10.2015 | 22.10.2024 | அ.சா.ஆ.8 | அ.சா.9 | அசல் |
| 9 | காயச்சான்று | 17.09.2015 | 22.10.2024 | அ.சா.ஆ.9 | அ.சா.10 | அசல் |
| 10 | முதல் தகவல் அறிக்கை | 12.10.2015 | 22.10.2024 | அ.சா.ஆ.10 | அ.சா.11 | அசல் |
| 11 | பார்வை மகஜர் | 12.10.2015 | 03.12.2024 | அ.சா.ஆ.11 | அ.சா.12 | அசல் |
| 12 | வரைபடம் | 12.10.2015 | 03.12.2024 | அ.சா.ஆ.12 | அ.சா.12 | அசல் |
| 13 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | 12.10.2015 | 03.12.2024 | அ.சா.ஆ.13 | அ.சா.12 | அசல் |
| 14 | அத்தாட்சி | 12.10.2015 | 03.12.2024 | அ.சா.ஆ.14 | அ.சா.12 | அசல் |
| 15 | படிவம் 91 | 12.10.2015 | 03.12.2024 | அ.சா.ஆ.15 | அ.சா.12 | அசல் |
| 16 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | 11.11.2015 | 03.12.2024 | அ.சா.ஆ.16 | அ.சா.12 | அசல் |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:–</u>

| சான்று பொருள் எண் | ஆவணத்தின் / சாட்சிப் பொருளின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1 | சுமார் 81 செமீ நீளமுள்ள வாள் ஒன்று. கைப்பிடி 12 செமீ இரும்பு பாகம் 69 செமீ. | அசா–2 |

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை
<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள்கள்</u> :– இல்லை

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.10 18:53:42 +0530

உதவி அமர்வு நீதிபதி மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தனர்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.